TNED140008122021

Presented on : 22-10-2021
Registered on : 22-10-2021
Decided on : 26-03-2026
Duration : 4 years, 5 months, 4 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12 ம் நாள்
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26 நாள் வியாழக்கிழமை

**சுருக்கு முறை விசாரணை வழக்கு எண்.623/2021**

ஞானபாலன்,
த/பெ.ராமசாமி,
க.எண்.98,ராணா நகர்,
பவானி டவுன்,
பவானி வட்டம்,
ஈரோடு மாவட்டம். ... புகார்தாரர் / மனுதாரர்.

**/ எதிர் /**

ரஹமத்துல்லா,
த/பெ. லேட். இமாம்,
க.எண்.8/8093,
EB காலனி, லட்சுமி நகர்,
வாசவி காலேஜ் அஞ்சல்,
ஈரோடு மாவட்டம். ... எதிரி / எதிர்மனுதாரர்.

இவ்வழக்கு கடந்த 22.10.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.விஜயகுமார் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. C.லோகநாதன் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 14:57:11 +0530

## தீர்ப்புரை

இவ்வழக்கானது, மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனி நபர் வழக்காகும்.

2. **புகார்தாரர் தாக்கல் செய்துள்ள புகாரின் சுருக்கம்:-**

எதிரியை புகார்தாரருக்கு நன்கு தெரியும் என்றும், எதிரி கடந்த 2021 ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் புகார்தாரரிடம், தனது அவசர தேவைக்காக ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மூன்று மாத காலத்தில் திருப்பி செலுத்துவதாக கூறியதன் அடிப்படையில், புகார்தாரர், எதிரியிடம் 11.04.2021ம் தேதியில் ரூ.2,00,000/யை கொடுத்துள்ளதாகவும், பின்னர், எதிரி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவானி கிளை, எண்.934737 என்ற காசோலையை 27.07.2021 என பின் தேதியிட்டு கொடுத்துள்ளார் என்றும், பின்னர், புகார்தாரர் கணக்கு வைத்துள்ள கரூர் வைசியா வங்கி, பவானி கிளையில் 27.07.2021ம் தேதியில், புகார்தாரர் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தபோது, மேற்படி காசோலையானது, "Payment Stopped Withdrawer" என்ற குறிப்புடன் 27.07.2021ம் தேதியில் திருப்பப்பட்டது என்றும், எதிரியிடம் காசோலையை பற்றி கேட்டபோது, பொறுப்பற்ற முறையில் சாக்குபோக்கு கூறியுள்ளார் என்றும், பின்னிட்டு புகார்தாரர் 31.07.2021ம் தேதியில் எதிரிக்கு வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 02.08.2021ம் தேதியில் பெற்றுக்கொண்டு, மேற்படி 22.08.2021ம் தேதி பொய்யான விபரங்களை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், பின்னிட்டு, பணமோ பதில் அறிவிப்போ எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஆகவே, எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென்று கூறி புகார்தாரரால் இந்த தனிநபர் குற்றமுறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றத்திற்கு, முதலேற்பு வழக்கு இருந்ததால், இப்புகார் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.26 14:57:17 +0530

4. எதிரி முன்னிலையானதும், அவருக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 204ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரியின் மீதான மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றம் பற்றி, எதிரியிடம் வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பு வழக்கை நிரூபிக்கும்பொருட்டு, புகார்தாரர் தரப்பில், புகார்தாரர் ம.சா.1 முதல் ம.சா.5 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் எ.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டும், எ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பு மற்றும் எதிரி தரப்பில் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறிய வரும் புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

6.1 இவ்வழக்கின் புகார்தாரரான பு.சா.1 ஞானபாலன் தனது சாட்சியத்தில், எதிரியை தனக்கு நன்கு தெரியும் என்றும், எதிரி கடந்த 2021 ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் தன்னிடம், தனது அவசர தேவைக்காக ரூ.2,00,000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மூன்று மாத காலத்தில் திருப்பி செலுத்துவதாக கூறியதன் அடிப்படையில், தான் எதிரியிடம் 11.04.2021ம் தேதியில் ரூ.2,00,000/யை கொடுத்துள்ளதாகவும், பின்னர், எதிரி, ம.சா.ஆ.1 ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவானி கிளை, எண்.934737 என்ற காசோலையை 27.07.2021 என பின் தேதியிட்டு கொடுத்துள்ளார் என்றும், பின்னர், தான் கணக்கு வைத்துள்ள கரூர் வைசியா வங்கி, பவானி கிளையில் 27.07.2021ம் தேதியில், தான் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தபோது, ம.சா.ஆ.2 மேற்படி காசோலையானது, "Payment Stopped Withdrawer" என்ற குறிப்புடன் 27.07.2021ம் தேதியில் திருப்பப்பட்டது என்றும், எதிரியிடம் காசோலையை பற்றி கேட்டபோது, பொறுப்பற்ற முறையில் சாக்குபோக்கு கூறியுள்ளார் என்றும், பின்னிட்டு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.26 14:57:21 +0530

தான் 31.07.2021ம் தேதியில் எதிரிக்கு ம.சா.ஆ.3 வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 02.08.2021ம் தேதியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4ஆகவும், மேற்படி 22.08.2021ம் தேதி பொய்யான விபரங்களை கூறி ம.சா.ஆ.5 பதில் அறிவிப்பு அனுப்பியும், புகார்தாரரின் வருமான வரிக்கணக்கின் நகல் ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு, பணமோ பதில் அறிவிப்போ எதுவும் கொடுக்கவில்லை என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார். இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. புகார்தாரர் தரப்பு சாட்சியின் சாட்சியத்திலிருந்து, எதிரிக்கு பாதகமான அம்சங்களை தொகுத்து, கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது, எதிரி பொய்வழக்கு, பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றும் கூறினார். எதிரி தரப்பில் எ.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். எ.சா.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. <u>எதிரி தரப்பு சாட்சியங்களிலிருந்து, அறிய வரும் எதிரி தரப்பு வழக்கு:–</u>

எ.சா.1 ரஜிபிஸ் தனது சாட்சியத்தில், தான் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, பவானி கிளையில் தலைமை மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனது வங்கியில் ரஹமத்துல்லாஹ் என்பவர் வங்கி கணக்கு வைத்துள்ளார் என்றும், அவரது வங்கி கணக்கு எண்.31034944790 என்றும், மேற்படி ரஹ்மத்துல்லாஹ் என்பவருக்கு தங்களது வங்கியில் இருந்து காசோலை கொடுக்கப்பட்டதாகவும், 29.09.2018ல் ரஹமத்துல்லா என்பவர் காசோலை எண்கள் – 934707, 93417, 934737, 934749, 934742, 934741 ஆகிய காசோலைகளுக் Stop Payment Letter கொடுத்துள்ளதாகவும், மேற்படி காசோலை Stop Payment என்பதற்காக ரஹமத்துல்லா என்பவரின் வங்கி கணக்கிலிருந்து 29.09.2018 வசூலிக்கப்பட்ட பண விவரப்பட்டியல் எ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:00:47 +0530

9. **புகார்தாரர் தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.**

9.1 எதிரியை புகார்தாரருக்கு நன்கு தெரியும் என்றும், எதிரி கடந்த 2021 ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் புகார்தாரரிடம், தனது அவசர தேவைக்காக ரூ.2,00,000/–(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மூன்று மாத காலத்தில் திருப்பி செலுத்துவதாக கூறியதன் அடிப்படையில், புகார்தாரர், எதிரியிடம் 11.04.2021ம் தேதியில் ரூ.2,00,000/யை கொடுத்துள்ளதாகவும், பின்னர், எதிரி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவானி கிளை, எண்.934737 என்ற காசோலையை 27.07.2021 என பின் தேதியிட்டு கொடுத்துள்ளார் என்றும், பின்னர், புகார்தாரர் கணக்கு வைத்துள்ள கரூர் வைசியா வங்கி, பவானி கிளையில் 27.07.2021ம் தேதியில், புகார்தாரர் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தபோது, மேற்படி காசோலையானது, "Payment Stopped Withdrawer" என்ற குறிப்புடன் 27.07.2021ம் தேதியில் திருப்பப்பட்டது என்றும், எதிரியிடம் காசோலையை பற்றி கேட்டபோது, பொறுப்பற்ற முறையில் சாக்குபோக்கு கூறியுள்ளார் என்றும், பின்னிட்டு புகார்தாரர் 31.07.2021ம் தேதியில் எதிரிக்கு வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 02.08.2021ம் தேதியில் பெற்றுக்கொண்டு, மேற்படி 22.08.2021ம் தேதி பொய்யான விபரங்களை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், பின்னிட்டு, பணமோ பதில் அறிவிப்போ எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஆகவே, எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138ன் கீழ் தண்டித்து, புகார்தாரருக்குரிய இழப்பீடு வழங்க தீர்ப்பளிக்க வேண்டுமென புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி நாராயணசாமி என்பவரிடம் கடனுக்காக பணம் வாங்கிக்கொண்டு வழக்கு காசோலை உட்பட 6 காசோலைகள் கொடுத்ததாகவும், மேற்படி நாராயணசாமி திருப்பித் தராமல் இருந்து வந்ததாகவும், அதனால், காசோலை குறித்து வங்கிக்கு Payment stopped by drawer



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.26 15:00:52 +0530

அறிவிப்பு கொடுத்தார் என்றும், மேற்படி நாராயணசாமி புகார்தாரரை வைத்து மோசடியாக காசோலையை நிரப்பி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், புகார்தாரரை எதிரிக்கு யார் என்றே தெரியாது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் ஒருபோதும் வரவுசெலவு இல்லை என்றும், எதிரிக்கு பனம் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என்றும், புகார்தாரர் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணமானது அவரது வருமானவரிக்கணக்கில் காட்டவில்லை என்றும், எதிரி காசோலைகளில் கையொப்பம் மட்டும் செய்ததாகவும், அதிலுள்ள காசோலை விவரங்களை நிரப்பவில்லை அதனால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என வாதிட்டார்

11. **<u>தீர்வு—</u>**

புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள் இந்நீதிமன்றம் கூர்ந்து ஆராய்கையில்,

12. புகார்தாரரின் புகாரின் முதல் நிலை வழக்கு உள்ளதாக நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார். அவ்வாறு புகார்தாரர் முதல் நிலை வழக்கை நிரூபணம் செய்து புகாதாரருக்கு ஆதரவாக வழக்கு உள்ள நிலையில் அனுமானம் எதிரிக்கு மாற்றப்படும். எதிரி அனுமானத்தை மறுத்து நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக தோற்றம் செய்யும் நிலையில் எதிரிக்கு ஆதரவாக அனுமானம் ஏற்பட்டு, திரும்ப புகார் வழக்கு நிருபணம் செய்ய வேண்டும் (Reverse onus). புகார் தனது வழக்கை எதிரிக்கு எதிரான குற்றப்பொறுப்பை நியாயமான ஐயத்திற்கு இடமில்லாமல் முழுமையாக நிரூபணம் செய்யப்பட வேண்டும். ஆனால், எதிரி புகார் வழக்கை முழுவதுமாக மறுத்து நிரூபணம் செய்ய தேவை இல்லை. எதிரி புகாரில் நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக probable defence தோற்றத்தை ஏற்படுத்தி முதல்நிலை வழக்கை மறுத்தாலே போதுமானது ஆகும்.

13. இந்த வழக்கில் புகார்தாரரிடம், எதிரி, ரூ.2,00,000/—(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) கைமாற்று கடனாக எதிரிக்கு தேவைப்படுவதாகக் கூறி மேற்படி தொகையை கடந்த 11.04.20213ம் தேதியில் புகார்தாரரிடமிருந்து பெற்றுள்ளார். பின்னர், கடன் தொகைக்கு ஈடாக எதிரி, ம.சா.ஆ.1 காசோலையை குறிப்பிட்ட



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:00:57 +0530

காலக்கெடுவிற்குள் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 (a)ன் கீழ் புகார்தாரர் வங்கியில் வங்கி மூலம் தாக்கல் செய்தபோது, மேற்படி காசோலையானது, ம.சா.ஆ.2 27.07.2021ம் தேதியில் "Payment Stopped Withdrawer" என்ற குறிப்புடன் திருப்பப்பட்ட பின்னர், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138(b)ன் படி எதிரிக்கு சட்டத்திற்குட்பட்ட காலகெடுவிற்குள் காசோலைக்குரிய தொகையை செலுத்தக்கோரி எதிரிக்கு, கடந்த 31.07.2021ம் தேதியில் தனது வழக்கறிஞர் மூலம் ம.சா.ஆ.3 அறிவிப்பினை எதிரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பை எதிரி 02.08.2021ம் தேதியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4ஆகவும், எதிரி தனது வழக்கறிஞர் மூலம் புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு அனுப்பிய பதிலறிவிப்பின் அசல் ம.சா.ஆ.5ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பை புகார்தாரருக்கு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138(c)–ன் படி 15 நாட்களுக்குள் காசோலை தொகையை எதிரி திருப்பித்தரவில்லை என்பதால், இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் பின்பற்றி புகார்தாரர் இந்த புகாரை தாக்கல் செய்துள்ளார். இதுபோன்ற வழக்குகளில் உச்சநீதிமன்றம் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் உள்ள நிபந்தனைகளை புகார்தாரர் பூர்த்தி செய்யும் பட்சத்தில் புகார்தாரருக்கு காசோலை கொடுத்த நபர் பொறுப்பாளியாவார் என சொல்லப்பட்டுள்ளது. அதில்

(2013) 1 SCC 117
MSR Leathers
/vs /
S. Palaniappan And Anr என்ற வழக்கில்

மாண்புமிகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்புரையின்படி புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 (a), (b) & (c)ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் இந்நீதிமன்றத்தில் பூர்த்தி செய்துள்ளார். எனினும் எதிரி இந்த வழக்கில் எழும் முரண்பாட்டை நிரூபிக்கும் வகையில் மாற்று முறையான சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் சட்டப்படியான கடன் பொறுப்பை தீர்ப்பதற்காக இந்த வழக்கு காசோலை புகார்தாரருக்கு வழங்கவில்லை என எதிரி மறுத்தலிக்கவேண்டும். புகார்தாரர் தரப்பில்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:01:00 +0530

தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியத்தின்படி புகார்தாரர் இவ்வழக்கை மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி முதல்நிலை வழக்கு உள்ளதாக நிருபணம் செய்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது.

14. இந்த நீதிமன்றத்தால் கீழ்கண்ட வகையில் எதிரி அனுமானத்தை மறுத்தளிக்கலாம், மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையில், **Rangappa (Vs) Sri Mohan, [AIR 2010 SC 1898]** for the principle that the initial presumption lies in favour of the complainant and it is the bounded duty of the accused to rebut such presumption.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையில், **M/S Laxmi Dyechem (Vs) State of Gujarat & ors. [2012 SCC 13 375]** for the principle that if the accused is able to establish a probable defence which creates doubt about the existence of a legally enforceable debt or liability, the prosecution can fail.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையில், **Rohitbhai Jivanlal Patel v. State of Gujarat and Another [2019 SCC ONLINE SC 389]** for the principle that it is the bounded duty of the accused to bring the facts and circumstances to rebut the presumption and mere denial of the fact would not absolve the accused from his liability.

15. **தீர்வு–**

புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் இருதரப்பு சான்றாவணங்கள் இந்நீதிமன்றம் கூர்ந்து ஆராய்கையில்,

16. புகார்தாரரின் புகாரின் முதல் நிலை வழக்கு உள்ளதாக நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார். அவ்வாறு புகார்தாரர் முதல் நிலை வழக்கை நிரூபணம் செய்து புகாதாரருக்கு ஆதரவாக வழக்கு உள்ள நிலையில் அனுமானம் எதிரிக்கு மாற்றப்படும். எதிரி அனுமானத்தை மறுத்து நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக தோற்றம் செய்யும் நிலையில் எதிரிக்கு ஆதரவாக அனுமானம் ஏற்பட்டு, திரும்ப புகார் வழக்கு நிருபணம் செய்ய வேண்டும் (Reverse onus). புகார் தனது வழக்கை எதிரிக்கு எதிரான குற்றப்பொறுப்பை நியாயமான ஐயத்திற்கு இடமில்லாமல் முழுமையாக நிரூபணம் செய்யப்பட வேண்டும். ஆனால், எதிரி புகார் வழக்கை



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:01:05 +0530

முழுவதுமாக மறுத்து நிரூபணம் செய்ய தேவை இல்லை. எதிரி புகாரில் நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக probable defence தோற்றத்தை ஏற்படுத்தி முதல்நிலை வழக்கை மறுத்தாலே போதுமானது ஆகும்.

17. **கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி நாராயணசாமி என்பவரிடம் கடனுக்காக பணம் வாங்கிக்கொண்டு வழக்கு காசோலை உட்பட 6 காசோலைகள் கொடுத்ததாகவும், மேற்படி நாராயணசாமி திருப்பித் தராமல் இருந்து வந்ததாகவும், அதனால், காசோலை குறித்து வங்கிக்கு Payment stopped by drawer அறிவிப்பு கொடுத்தார் என்றும், மேற்படி நாராயணசாமி புகார்தாரரை வைத்து மோசடியாக காசோலையை நிரப்பி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், புகார்தாரரை எதிரிக்கு யார் என்றே தெரியாது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் ஒருபோதும் வரவுசெலவு இல்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.**

மேற்படி வாதத்தினை கருத்திற்கொண்டு புகார்தாரரின் புகார், சாட்சியம் மற்றும் வழக்கறிஞர் அனுப்பிய சட்ட அறிவிப்பினை பரிசிலினை செய்கையில், புகார்தாரர் தனது சாட்சியத்தில், "எதிரி எனக்கு அறிமுகமான நபர் ஆவார். அதன் அடிப்படையில், எதிரி கடந்த 2021 ஏப்ரல் முதல் வாரத்தில் என்னிடம் அணுகி குடும்ப அவசர செலவு நிமித்தம் ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) கடனாக தேவைப்படுவதாகவும், அதனை மூன்று மாத கால வாய்தாவில் திருப்பி செலுத்துவதாகவும் கூறி கடன் கேட்டார். மேற்படி தொகையை நான் எதிரிக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு நான் தொகையை தயார் செய்து வைப்பதாகவும் 11.04.2021ம் தேதி வந்து பெற்றுச் செல்லுமாறும், வரும்போது தொகைக்கு ஆதரவாக ஒரு காசோலை கொண்டு வரும்படியும் கூறினேன். அதன்படி கடந்த 11.04.2021ம் தேதி நான் தயார் செய்து வைத்திருந்த தொகையை எனது இல்லத்தில் எதிரி ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)த்தை பெற்றுக்கொண்டு மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் வகையில் எனது பெயருக்கு எதிரியின் பெயரில் வங்கி கணக்கு உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவானி கிளை வங்கி காசோலை எண். 934737 என்ற எண்ணுள்ள காசோலையை 27.07.2021 பின் தேதியிட்டு ரூ.2,00,000/-க்கு எனது பெயருக்கு பூர்த்தி செய்து அதில் கையொப்பம் செய்து கொடுத்தார்" என சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:01:07 +0530

18. ஆனால், எதிரி தரப்பில் புகார்தாரரை யார் என்றே தெரியாது என்று புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பில் கூறியுள்ளார் என்பதை ம.சா.ஆ.5யை பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், எதிரியிடம் குற்றச்சார்த்து குறித்து வினவியபோது, பொய்வழக்கு மட்டும் என்றே கூறியுள்ளார் என்பதும், எதிரிக்கு பாதகமான (Incriminating circumstances) பொய் வழக்கு என்றும், கு.வி.மு.ச பிரிவு 313(5)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலில் வழக்கு பொய் வழக்கு என்றும், கடன் வாங்கவில்லை என்றும், நாராயணசாமி என்பவரிடம்தான் பணம் வாங்கினேன் என்றும், அதற்கு ஆதராவக 934737, 934707, 934719, 934742, 934741 மற்றும் 934749 கொடுத்ததாகவும், புகார்தாரரை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கூறியுள்ளார். ஆனால், எதிரி தரப்பில் வாதிடுவதுபோல், புகார்தாரரை யார் என்று தெரியவில்லை என்றால் சட்ட அறிவிப்பு வந்த அப்போதே அவர் மீது ஏதேனும் புகாரோ அல்லது நீதிமன்றத்தில் தனிப்பட்ட புகாரோ தாக்கல் செய்திருப்பார். ஆனால், அவ்வாறு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் சட்ட அறிவிப்பில் மட்டும் புகார்தாரரை யார் என்றே தெரியாது என வாதிடுவது இந்நீதிமன்றம் ஏற்கும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

19. மேலும், எதிரி தரப்பில் வாதிடுவதுபோல், வழக்கு காசோலை உட்பட 6 காசோலையை நாராயணசாமி என்பவர் மோசடியாக வைத்தும் திருப்பி தராமல் இருந்து வந்திருந்தால் அவர் மீது ஏதேனும் புகார் அல்லது சட்ட நடவடிக்கை எடுத்திருப்பார். எந்த ஒரு சாதாரன மனிதனும் தனக்கு எதிராக ஒரு மோசடியாக தனது காசோலையை பயன்படுத்தினால், அவர் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்திருப்பார். அவ்வாறு எந்த ஒரு நடவடிக்கையும் எதிரி தரப்பில் எடுக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

20. மேலும் எதிரி புகார்தாரர் மீது எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்காமல், புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பில் எதிரி பெயர் அருகே EB Staff retired என்று வரவேண்டும் என்றும், EB Staff மட்டும் போட்டது புகார்தாரரை யார் என்று



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.26 15:01:11 +0530

தெரியாததால் போடவில்லை என்கிற காரணத்தால் மட்டுமே புகார்தாரரின் வழக்கை மறுத்தளித்ததாக தீர்மானிக்க இயலாது.

21. மேலும், எதிரி தரப்பில் வங்கி மேலாளரை எ.சா.1ஆக விசாரித்து, 29.09.2018ம் தேதி பணம் வசூலிக்கப்பட்டதற்கான பண விவரப்பட்டியல் எ.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எ.சா.ஆ.1 பரிசிலனை செய்கையில், 29.09.2018ம் தேதி புகார்தாரரால் அறிவிப்பு கொடுத்து காசோலைகள் நிறுத்தப்பட்டது என இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

22. மேலும், எதிரி தரப்பில் நாராயணசாமி என்பவரிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டு காசோலையை திரும்ப எதிரி கேட்டபோது, காசோலை தராமல் இழுத்து அடித்து வந்தார் என்றும், காசோலை தொலைந்துவிட்டது எனவும் வாதிட்டார். ஆனால், எதிரி தரப்பில் வாதிடுவதுபோல், நாராயணசாமி காசோலை தொலைத்து இருந்தால் இந்த சட்ட அறிவிப்பு வந்தவுடன் நாராயணசாமி என்பவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார். மேலும், நாராயணசாமியிடம் வாங்கப்பட்ட பணம் குறித்தும் திரும்ப செலுத்தப்பட்ட பணம் குறித்தும் ஆவணம் காவல் நிலையத்தில் கொடுத்து நாராயணசாமி மீது நடவடிக்கை எடுத்திருப்பார். ஆனால், எவ்வித நடவடிக்கையும் எதிரி தரப்பில் மேற்கொள்ளவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரியின் வாதத்தினை இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.

23. ***மேலும், எதிரி தரப்பில், எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என வாதிடப்பட்டது.***

மேற்படி வாதத்தினை கருத்திற்கொண்டு புகார்தாரரின் புகார், சட்ட அறிவிப்பு மற்றும் முதல் விசாரணையை பரிசீலனை செய்கையில் எதிரி அனுப்பிய சட்ட பதில் அறிவிப்பில் ம.ச.ஆ.5ல் புகார்தாரருக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என வாதம் எடுக்கப்பட்டுள்ளது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:01:14 +0530

***இந்த நீதிமன்றத்தால் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் Basalingappa v. Mudibassapa (2019 SCC (5) 418)** that when the fianancial capacity is questioned with cogent and reasonable evidence to doubt the same, it is incumbent on complainant to explain the same, failing which the accused is entiled to acquittal.*

24. மேற்படி தீர்ப்பின்படி பரிசிலனை செய்கையில், புகார்தாரர் தனக்கு வருமானம் உள்ளது என்று Income tax returns ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் ம.சா.ஆ.6 பரிசிலனை செய்கையில், புகார்தாரர் 2021ம் ஆண்டு கரூர் வைஸ்யா வங்கியில் ரூ.33,22,179/- கடன் வாங்கியுள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி கடனுக்கு வட்டியாக ரூ.3,29,000/- செலுத்துவதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் கடன் வாங்கியது புகார்தாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். மேலும் புகார்தாரர் டிரான்ஸ்போர்ட் கம்பெனி நடத்தி ஆவின் பால் டேங்கர் லாரியை வாடகைக்கு விட்டு வருவதாகவும், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தனது மனைவி டிரான்ஸ்போர்ட் நிறுவனம் வைத்து நடத்தி வருகிறார் என்றும், தனது மனைவி பத்மினிக்கு ரூ.51,60,000/- கொடுத்துள்ளார் என்றும், அதற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என சாட்சியம் அளித்துள்ளார்.

25. மேலும் புகார்தாரர் தனிப்பட்ட நபரிடம் கடன் வாங்காமல் கூட கடன் வாங்கியதாக வருமான வரிக்கணக்கில் காட்டலாம். பொதுவாக வங்கியில் ஒரு நபர் கடன் வாங்கும்போது அவருக்கு திருப்பி செலுத்தக்கூடிய அளவிற்கு வருமானம் உள்ளதா, அவரது கணக்கு விவரம், (Cibil Score) மற்றும் சொத்து விவரம் என அனைத்தையும் பார்த்து தான் கடன் கொடுப்பார்கள். மேற்படி வருமான வரிக்கணக்கை வைத்து நிதியாண்டில் எந்தெந்த மாதத்தில் மேற்படி தொகை என்னிடம் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், புகார்தாரர் வங்கியில் கடன் வாங்கியிருக்கும் நிலையில் அவருக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு நிதி வசதி உள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.26 15:01:18 +0530

26. ***எதிரிதரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் புகார்தாரர் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணமானது அவரது வருமானவரிக்கணக்கில் காட்டவில்லை என வாதிட்டார்.***

மேற்படி வாதத்தினை பரிசிலினை செய்கையில், எதிரிதரப்பில் புகார்தாரரை 2022 – 2023ம் ஆண்டிற்கான வருமான வரிக்கணக்கை ம.சா.ஆ.6ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வருமானவரி கணக்கில் புகார்தாரர் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை காட்டவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், புகார்தாரர் இதே நீதிமன்றத்தில் சக்திவேல், பழனிச்சாமி ஆகியோர் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. வழக்கு கடன் மற்றும் மற்றவர்களுக்கு கடன் கொடுத்தது குறித்து புகார்தாரர் அவரது வருமானவரிக் கணக்கில் காண்பிக்கவில்லை என்ற காரணம் எதிரியை மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றப்பொறுப்பில் இருந்து விடுவிக்க முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிரி புகார்தாரர் மீது உரிய துறையின் கீழ் நடவடிக்கை எடுக்க இந்த தீர்ப்பு எந்தவிதத்திலும் தடையாக இருக்காது என நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

27. மாண்புமிகு சண்டிகர் உயர்நீதிமன்றம் ***Shamin Bano Vs. Shabana Khan @ Sonai,*** **பின்வருமாரு கூறுகிறது** for the proposition that not mentioning the lent amount in the income tax return would not amount to rebuttal of presumption, where other ingredients were fulfilled beyond reasonable doubt.

28. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ***P. Pandiyarajan vs. Sri Parkunan 2015 ( 1) TNLR 379****, wherein the Hon'ble Madras High Court held that "Merely because the advancement of loan in favour of the Accused did not reflect in the Income Tax Return, does not mean that no such amount was advanced to the Accused".* என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரியின் வாதத்தினை இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:01:21 +0530

29. எதிரி தரப்பில் வழக்கு காசோலை நாராயணசாமி என்பவரிடமிருந்து புகார்தாரர் பெற்று மோசடியாக நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என வாதிடப்பட்டது.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Gian Chand And Brothers And Another v. Rattan Lal Alias Rattan Singh (2013 SCC 2 606) பின்வருமாறு கூறுகிறது. For the proposition that the the burden of proof lies on the person who alleges the fraud, threat and coercion. மேற்கண்ட முன்தீர்ப்புரை அடிப்படையில் ஒருவர் மோசடியாகவோ, பயமுறுத்துவதாகவோ இருந்தால் அதனை நிரூபிக்கும் பொருட்டு அவரையே சார்ந்ததாகும். ஆனால், மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில். எதிரி தரப்பில் மோசடியாக காசோலை நிரப்பி இவ்வழக்கு தாக்கல் செய்ததற்குண்டான எந்தவொரு சான்றாவணம் மற்றும் சாட்சியம் மூலம் நிரூபிக்கப்படவில்லை. மேலும், சக்திவேல் என்பவரிடம் காசோலை கொடுத்திருந்தால் எதிரி மேற்படி சக்திவேல் மீது புகாரோ அல்லது சட்ட அறிவிப்போ கொடுத்திருப்பார். அவற்றை எதையும் எதிரி தரப்பில் கொடுக்கவில்லை என்பது நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரியின் வாதத்தினை இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.

30. ***எதிரி தரப்பில், எதிரி காசோலைகளில் கையொப்பம் மட்டும் செய்ததாகவும், அதிலுள்ள காசோலை விவரங்களை நிரப்பவில்லை என்று வாதிட்டார்.***

மேற்படி வாதத்தினை பரிசீலனை செய்கையில் மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் Bir Singh Vs. Mukesh Kumar (2019 (4) SCC 197) பின்வருமாறு கூறுகிறது. “ if the cheque is volountarily presented to the payee towards payments, payee may fill up the amount and other particulars and it is itself would not invalidate the cheque and the onus would still be on the accused to prove that the cheque was not issued for discharge of debt or liability by adducing evidence. என்று கூறப்பட்டுள்ளது. மேலும்,

31. மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 20ஐ மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறுகிறது Kalamani Tex Vs. P. Balasubramanian (2021 SCC 5 283) & Oriental Bank of Commerce Vs. Prabodh Kumar Tewari (2022 SCC ONLINE SC 1089)



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.26 15:01:24 +0530

that the blank cheque voluntarily signed and issued by the accused towards payment of some amount would not invalidate the instrument, nor it would affect the presumption raised U/s. 118 & 139 of NI Act என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டமாகும். மேற்படி முன்தீர்ப்புரைகளின் அடிப்படையில் காசோலையில் உள்ள கையொப்பமானது எதிரிதரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில், காசோலையை பெறுபவர் அதனை நிரப்பிக்கொள்ள எந்த தடையும் இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

மேற்படி வாதமானது நீதிமன்றத்தால் ஏற்கத்தக்க வகையில் அமையவில்லை. எனவே, மேற்படி வாதமானது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.

32. மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **M. Abbas Haji Vs T.N. Chennakesava (2019 SCC ONLINE SC 1240)** is relied upon for the proposition that it is the duty of the accused to explain and prove his part on how his cheque entered into the hands of the complainant.

33. எதிரி இவ்வழக்கு காசோலை குறித்தும், காசோலையில் உள்ள கையொப்பம் மறுத்தும் எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில், மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் அவருடையதே என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் பிரிவு 138ன் படி சட்டப்படியான கடன் பொறுப்பிலிருந்து விடுவிக்க இயலாது. எதிரி சட்டப்படியான பொறுப்பிலிருந்து விடுவிக்க இயலாது. எதிரி சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காகத்தான் ம.சா.ஆ.1 காசோலை கொடுக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

34. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் இரங்கப்பா எதிரி ஸ்ரீ மோகன் 2010 (4) CTC 118 என்கிற வழக்கில் வழங்கிய தீர்ப்பில் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் புகார்தாரருக்கு சாதகமாக உள்ள அனுமானத்தை மறுத்துரைப்பதற்கு எதிரியால் முன் வைக்கப்படும் வாதத்தை ஐயத்திற்கு இடமின்றி மெய்பிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், எதிரி குறிப்பிடுவது போல் அந்த செயல் நடைபெற்று இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்பதை முன்வைத்தால் போதுமானது என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் அது போன்ற எந்த செயலும் எதிரிதரப்பில் மேற்கொள்ளவில்லை.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:01:39 +0530

35. எதிரி அவரது தனிப்பட்ட தரப்பை வாய்மொழி சாட்சியம் வாயிலாகவோ அல்லது ஆவண சாட்சியங்கள் வாயிலாகவோ போதுமான அளவு புகார்தாரரின் புகாரை மறுத்து அதை நிரூபிக்கவில்லை. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139ன் படியான அனுமானம் மறுத்தளிக்கக்கூடிய அனுமானமே என்றாலும், எதிரி தரப்பில் அவ்வாறு மறுத்தளிக்காத நிலையில், அந்த அனுமானமே இறுதியான அனுமானம் ஆகும். ஆகவே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நிருபணம் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

36. முடிவாக, எதிரியை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து அதற்கு தண்டனையாக **ஒன்பது மாதங்கள் மெய்காவல் சிறைதண்டனை** விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2)ன் கீழ் இந்நீதிமன்றம் தண்டித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. **காசோலையின் மொத்தத் தொகையான ரூ.2,00,000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) இழப்பீட்டுத் தொகையாக கு.வி.மு.ச பிரிவு 357(3)ன்** கீழ் எதிரி புகார்தாரருக்கு இத்தீர்ப்பு தேதியிலிருந்து **இரண்டு மாத கலத்திற்குள்** கொடுக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது. எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்த தவறினால் கு.வி.மு.ச பிரிவு 431 மற்றும் உ/இ இ.த.ச பிரிவு 64ன் படி எதிரிக்கு மேலும், **இரண்டு மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை** விதித்து உத்தவிடப்படுகிறது. மேற்கண்ட தண்டனை காலங்கள் முடிந்த பிறகும் எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 421ன் படி புகார்தாரர் நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்து கொள்ளலாம்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாளாகிய இன்று அவையறிய என்னால் பகரப்பட்டது.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.26 15:01:47 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**பவானி.**

**இணைப்பு:-**

**புகார்தாரர் தரப்பு சாட்சி-**

ம.சா.1 திரு. ஞானபாலன் (புகார்தாரர்).

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 27.07.2021 | ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பவானி கிளை, எண்.934737 என்ற காசோலை - அசல். |
| ம.சா.ஆ.2 | 27.07.2021 | ரிட்டன் மெமொவின் அசல். |
| ம.சா.ஆ.3 | 31.07.2021 | வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அஞ்சலக இரசீதுடன் கூடிய அலுவலக நகல். |
| ம.சா.ஆ.4 | 02.08.2021 | மேற்படி அறிவிப்பை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல். |
| ம.சா.ஆ.5 | 22.08.2021 | எதிரியின் பதில் அறிவிப்பு |
| ம.சா.ஆ.6 | 2022-2023 | புகார்தாரரின் வருமான வரிக்கணக்கின் நகல் |

**எதிரி தரப்பு சாட்சிகள்-**

| | |
|---|---|
| எ.சா.1 | திரு.ரஜிபிஸ். |

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் -**

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | 20.09.2018-30.09.2018 | கணக்கு விவரப் பட்டியல் |

**புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பு சான்றுபொருட்கள்** - இல்லை.

**குறிப்பு-**

1. தீர்ப்பு பற்றிய தகவல் வழக்கு தரப்பினர்களுக்கு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. எதிரிக்கு தீர்ப்பு நகல் இலவசமாக வழங்கப்பட்டது.
4. இந்நீதிமன்ற MP No.10/2026, நாள் 26.03.2026 உத்தரவின்படி எதிரிக்கு விதிக்கப்பட்ட தண்டனை கு.வி.மு.ச பிரிவு 389(3)ன் படி 24.04.2026 வரை நிறுத்தி வைக்கப்படுகிறது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.26 15:02:01 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**1. பவானி.**